கோவை மாநகராட்சி பகுதியில் DINATHANTHI

# 3 ஆயிரம் தெரு நாய்களுக்கு கருத்தடை

கோவை,ஜூலை.28-

கோவை மாநகராட்சி ஆணையாளர் லதா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

கோவை மாநகராட்சியின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் தெருநாய்களின் தொல்லைகள் இருப்பதாக பொதுமக்களிடம் இருந்து தொடர்ந்து புகார்கள் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் தெருவில் சுற்றி திரியும் நாய்களை பிடித்து கொல்ல சட்டத்தில் வழியில்லை. எனவே இந்த தெருநாய்களை பிடித்து தடுப்பூசிகள் போடப்பட்டும் மற்றும் கருத்தடை செய்யப்பட்டும் வருகிறது.

வெறிநாய்க் கடியில் இருந்தும், நாய்கள் தொல்லைகளில் இருந்தும் மக்களை காக்கும் வகையில் கோவை மாநகராட்சி சீரநாயக்கன்பாளையத்தில் செயல்படும் தெருநாய் கருத்தடை மையம் மற்றும் ரோட்டரி சங்கம் ஆகியவை சார்பில் மாநகராட்சியின் ஒவ்வொரு பகுதியிலும் கடந்த 12-ந் தேதி முதல் 19-ந் தேதி வரை முகாம்கள் அமைத்து தெருவில் சுற்றி திரிந்த சுமார் 3 ஆயிரத்து 61-க்கும் மேற்பட்ட நாய்கள் பிடிக்கப்பட்டு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கோவை மாநகராட்சி சீரநாயக்கன்பாளையத்தில் செயல்பட்டு வரும் தெருநாய் கருத்தடை மையம் மூலம் இதுவரை சுமார் 15 ஆயிரம் தெருநாய்களுக்கு மேல் கருத்தடை செய்யப்பட்டு நாய்களின் பெருக் கம் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது. பொதுமக்கள் தெருநாய்கள் தொடர்பான பிரச்சினைகளை சீரநாயக் கன்பாளையத்தில் செயல்படும் தெருநாய்கள் கருத்தடை மையத்திற்கு தொடர்பு கொண்டு விவரம் தெரி வித்தால் அந்த நாய்கள் பிடிக்கப்பட்டு கருத்தடை மற்றும் தடுப்பூசி போடப்படும்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.